<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>RCS.No. 04/2025</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.1</u>

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பார்த்திபன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 22nd day of January, 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். கடந்த 2023ம் ஆண்டு எனது மனைவி பெயரில் உள்ள நான்கு சக்கர வாகனத்தை ரெட்டியபட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு R.P.S.K திட்டத்தின் கீழ் வாடகைக்கு இயக்குவதற்காக கொடுத்து தன் பேரில் மே 2023 மற்றும் ஜீன் 2023 ஆகிய மாதங்களுக்கு வண்டி இயங்கியதற்கான வாடகை தொகையை எனது மனைவி பெயரில் உள்ள வங்கிககணக்கில் வரவு வைப்பதற்காக வழக்கின் எதிரி திரு.ராஜீ, N.H.M திட்ட கணக்கு உதவியாளர் (ஒப்பந்த ஊழியர்) என்பவரை அணுகியபோது அவர் அதற்காக ரூ. 3000/- லஞ்சப்பணம் கேட்டதாக நான் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு 28.08.2025, 29.08.2025, 30.08.2025 ஆகிய தேதிகளில் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிவடைந்த காரணத்தினால் அதற்கு பின்னர் எனக்கு அந்த பொறி வைப்பு நடவடிக்கைகளில் ஆஜர் ஆக இயலாமல் போன காரணத்தினால் நான் அதைத் தொடர்ந்து பொறி வைப்பு நடவடிக்கையில் கலந்து

கொள்ள இயலவில்லை.

அதைத்தொடர்ந்து எனது மனைவி பெயரில் உள்ள வங்கிக்கணக்கில் மே மற்றும் ஜீன் 2023 மாதத்திற்கான வாடகை தொகை வரவு வைக்கப்பட்டதை தொடர்ந்து எதிரி பணம் லஞ்சப்பணத்தை வாங்கமாட்டார் என்றும், பொறிவைப்பு நடவடிக்கையில் நான் கலந்து கொள்ள எனக்கு விருப்பம் இல்லை என்று சொல்லிவிட்டேன். அதனைத்தொடர்ந்து புலன்விசாரணை நடைபெற்று குற்றம் நிரூபணம் ஆனபோதும் எதிரி ஒப்பந்த பணியாளர் என்பதால் அவர் மீது துறைரீதியாகவோ, ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம் மூலமோ நடவடிக்கை எடுக்க முடியாது என்ற காரணத்தால் எதிரி மீது உண்மைத்தன்மை அறிக்கை சென்னை ஊழல் தடுப்பு இயக்குநரகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அதனடிப்படையில் ஒப்பந்த பணியாளரான திரு. ராஜீ சிவகாசி மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களால் 22.09.2025ம் தேதி அன்று பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதனைத்தொடர்ந்து நான் தற்போது வேளச்சேரியில் எனது வாகனத்தை ஓட்டி தொழில் நடத்திவரும் நிலையில், எதிரி பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டதால் மேற்கொண்டு இந்த வழக்கின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறித்து எனக்கு அனுப்பிய அறிவிப்பின் அடிப்படையில் நான் அந்த இறுதியறிக்கையின் முடிவை ஏற்றுக்கொண்டு அதன்பேரில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.